# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.37

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

**V செந்தில்பாலாஜி**

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-2 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் | 2-19 |
| 3. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு | 19-29 |
| 4. | போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை) | 30-37 |
| 5. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | 38-48 |
| 6. | முடிவுரை | 49-50 |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.37
## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023–2024

### முன்னுரை

மக்களின் சுகாதார மற்றும் சமூகப் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் அக்கறை கொண்ட மக்கள் நல அரசாக விளங்குவதாலும் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களை கள்ளச்சாராயத்தின் பிடியிலிருந்து பாதுகாக்கவும், இவ்வரசானது மதுபானங்கள் தொடர்பாக ஒரு சீரிய கொள்கையினை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அலகானது, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு,

போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு ஆகிய மூன்று துறைகள் மற்றும் ஒரு பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியவை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அலகின் கீழ் இயங்கி வருகின்றன.

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

2.1 தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் X / 1937) மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை செயல்படுத்தும் அதிகாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகள் பின்வரும் பரந்த குறிக்கோள்களின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன:–

- சிறந்த ஆயத்தீர்வை நிர்வாகத்தின் மூலம் அரசுக்கு அதிகபட்ச வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்.
- மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ளச்சாராயம் விற்பனை மற்றும் மாநில எல்லை வழியாக போலி மற்றும் ஆயத்தீர்வைக்கு உட்படாத மதுபானம் வருவதைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2.2 மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் 2 இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித்துறை) நிலையில் 1 நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் 5 உதவி ஆணையர்களும் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவி வருகின்றனர். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக துணை / உதவி ஆணையர்கள் (கலால்) பணிபுரிந்து வருகின்றனர்.

2.3 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் சாராவி / இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் / பீர் / ஒயின் உற்பத்தியினைக் கட்டுப்படுத்தவும், அவற்றைத் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதிப்பதைக்

கண்காணிக்கவும் இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் துணை ஆட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் மேற்காணும் பணிகள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ள வருவாய்த் துறையைச் சேர்ந்த வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர்களால் செயல்படுத்தப்படுகின்றன.

**கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses)**

2.4 தமிழ்நாட்டில் சாராவி (Spirit) உற்பத்தி செய்ய மூலப்பொருளாக கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses) பயன்படுத்தப்படுகிறது. சர்க்கரை ஆலையில் சர்க்கரை தயாரிப்பின்போது துணைப் பொருளாக கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், பயன்படுத்துதல், விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல் மற்றும் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் / மாவட்ட

வருவாய் அலுவலர் ஆகியோர் அதிகாரம் படைத்த அலுவலர்கள் ஆவர். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல் மற்றும் பயன்படுத்துதல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் வழங்கிட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால், மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முன் அனுமதி வழங்கப்படுகிறது. உரிமையாளர்கள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் நிர்ணயம் செய்யும் அளவில் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை இருப்பு வைத்து பயன்படுத்த இயலும்.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி**

2.5 தமிழ்நாட்டில் 17 வடிப்பாலைகள் உள்ளன. இவற்றில் 15 வடிப்பாலைகள் தனியார் துறையிலும், 2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. இவ்வடிப்பாலைகள் மதுபானம் உற்பத்தி செய்யப் பயன்படும் மூலப்பொருளான சாராவியை உற்பத்தி செய்கின்றன. சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் தயாரிப்பதற்கும் மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள்,

இதர ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் குறைந்த அளவிலும் பயன்படுத்தப்படுகிறது. வார்னிஷ் (Varnish) மற்றும் வண்ணப் பூச்சுகள் (Paint) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இயல்பு மாற்றப்பட்ட சாராவி, கரைப்பானாக (Solvent) பயன்படுத்தப்படுகிறது.

**சுத்திகரிக்கப்பட்ட சாராவி (Extra Neutral Alcohol)**

2.6 சுத்திகரிக்கப்பட்ட சாராவி இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்த மாநிலத்தில் மொத்தம் 17 வடிப்பாலைகள் இந்த சாராவியை உற்பத்தி செய்கின்றன. மேற்கண்ட வடிசாலைகளில் 2022–2023 வரையில் சாராவி தயாரிப்பு 12.17 கோடி லிட்டர் ஆகும். 2022–2023–ஆம் ஆண்டின் நான்கு காலாண்டிற்கும் 5.28 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட சாராவியை பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மதுபான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (GENA)**

2.7 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் உயர்தர மதுபான வகைகளைத் தயாரிப்பதற்கு தானியங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் சாராவியை பயன்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாராவி உற்பத்தி நிறுவனங்கள் இல்லை என்பதால் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மதுபான நிறுவனங்களுக்கு 2022–2023–ஆம் ஆண்டில் நான்கு காலாண்டிற்கும் 6.33 கோடி லிட்டர் மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**எத்தனால் (Ethanol)**

2.8 எத்தனால் என்பது தாவர அடிப்படையிலான எரிபொருளாகும். எத்தனால் பசுமை எதிர்வினை வாயுக் கசிவை வெகுவாகக் குறைத்து, அதன் மூலம் சுற்றுச்சூழலை மாசு இடர்களிலிருந்து பாதுகாக்கிறது. எத்தனால் பெட்ரோலுடன் கலந்து பயன்படுத்தப்படும்போது

கச்சா எண்ணெய் இறக்குமதியினைக் குறைத்து அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்கு உதவுகிறது. தமிழ்நாட்டில், 12 வடிப்பாலைகளில் எத்தனால் உற்பத்தி செய்யப்படுகிறது. 2022–2023–ஆம் ஆண்டில் எத்தனால் உற்பத்தி 2.14 கோடி லிட்டர் ஆகும்.

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

2.9 தற்பொழுது தமிழ்நாட்டில் 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவை இயங்கி வருகின்றன.

## பீர் ஏற்றுமதி

2.10 தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பீரினை ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. வெளி மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்ய இணையம் மூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

**அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி**

**2**.11 அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, 1981–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி உரிய சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி ஆணைகள் வழங்கப்படுகின்றன. அயல்நாட்டு மதுபானங்களின் இறக்குமதியை எளிதாக்கும் வகையில் 02.03.2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் முகமை நிறுவனமாக (Nodal Agency) நியமிக்கப்பட்டு, எப்.எல்.2 உரிமதாரர்கள் (மனமகிழ் மன்றங்கள்), எப்.எல்.3 உரிமதாரர்கள் (மூன்று நட்சத்திர மற்றும் அவற்றிற்கு குறைவான நட்சத்திர தகுதி பெற்ற உணவு விடுதிகள்) எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்கள் அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்ய ஏதுவாக சிறப்புக் கட்டணத் தொகையில் 3 விழுக்காடு சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

**2**.12 எப்.எல்.3 உரிமதாரர்கள் (நான்கு நட்சத்திர மற்றும் அவற்றிற்கு அதிகமான

நட்சத்திர தகுதி பெற்ற உணவு விடுதிகள்) பிற மாநிலங்களில் அமைந்துள்ள அயல்நாட்டு மதுபானங்களை விநியோகிப்பவர்களின் ஆயத்தீர்வை பிணைமுறி கிடங்குகளில் (Excise Bonded Warehouses) இருந்து இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானங்களை நேரடியாகக் கொள்முதல் செய்யலாம்.

2.13 அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ததன் மூலமாக 2022–2023–ஆம் ஆண்டில் சிறப்புக் கட்டணமாக அரசுக்கு ரூ.44.79 கோடியும் சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு ரூ.12.23 இலட்சமும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## நீரா

2.14 தென்னை மரங்களின் பூம்பாளையிலிருந்து வரும் சாற்றிலிருந்து நொதிப்பு உதிர்ப்பு தொழில்நுட்பத்தினைப் (Anti Fermentation Technology) பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஆல்கஹால் இல்லாத ஊட்டச்சத்து பானமே நீரா ஆகும். தென்னை மரங்களிலிருந்து நீரா சேகரிப்பதற்கும்

நீராவிலிருந்து இதர பொருட்கள் தயாரிப்பதற்கும் உரிமங்கள் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

2.15 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் (Companies Act, 2013) பதிவு செய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் அல்லது 1983–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் நீராவை சேகரிக்கவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் மற்றும் நீராவிலிருந்து பொருட்கள் தயாரிப்பதற்குமான உரிமங்கள் பெற தகுதி பெற்றவை ஆகும். உரிமம் கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத்திலும் பதிவு செய்திருக்கவேண்டும்.

**பதநீர்**

2.16 பனை மரம், ஈச்ச மரம் மற்றும் அவை போன்ற மரங்களின் பூம்பாளையிலிருந்து, நொதிக்க விடாமல் சேகரிக்கப்படும் பிரபலமான ஊட்டச்சத்து பானமே பதநீர் ஆகும். பதநீரை

சேகரித்தல், இருப்பு வைத்தல், கொண்டு செல்லுதல், விற்பனைச் செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் பதநீரிலிருந்து பொருட்களைத் தயாரித்தல் ஆகியவற்றை முறைப்படுத்தும் பொருட்டு உரிமம் வழங்கப்படுகிறது .

**மாநில ஆயவில்லைகள்**

2.17 போலி மதுபான விற்பனையை ஒழிக்கவும், பிற மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தலை தடுக்கவும், மதுபான தயாரிப்பு நிறுவனங்களால் உற்பத்திச் செய்யப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், பீர் மற்றும் ஒயின் பாட்டில்களுக்கு செலுத்தப்படும் ஆயத்தீர்வையினை உறுதி செய்யவும், காகித ஆயவில்லைகளுக்குப் பதிலாக நகலெடுக்க முடியாத, செயற்கை இழை ஒளிரும் ஆயவில்லைகள் அரசால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்கள் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது, மாதமொன்றுக்கு சராசரியாகத் தேவைப்படும் ஆயவில்லைகள் 27.00 கோடி ஆகும். 2022–2023–ஆம் ஆண்டில்

ஆயவில்லைகளின் விற்பனை மூலம் அரசு ஈட்டியுள்ள நிகர வருவாய் ரூ.24.42 கோடியாகும்.

**மின் ஆளுமை நடவடிக்கைகள்**

2.18 உரிமங்களைப் புதுப்பித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான அனுமதி ஆணைகள் வழங்குவதற்குரிய கால அவகாசத்தினை வெகுவாகக் குறைக்கும் நோக்கில், இணையதள செயலிகள் மூலமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

அ) வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பீர் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆணை வழங்குதல்.

ஆ) எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமங்களைப் புதுப்பித்தல்.

இ) அயல்நாட்டு மதுபானங்களை எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்கள் இறக்குமதி செய்ய அனுமதி ஆணை வழங்குதல்.

2.19 மின் ஆளுமை நடவடிக்கைகளின் கீழ் 74 சேவைகளை இணையதள செயலிகள் மூலம் வழங்கும் வகையில் நடவடிக்கைகள்

மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகளை தேசிய தகவல் மையம் (NIC) மூலம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி**

2.20 முன்னாள் மதுவிலக்குக் குற்றவாளிகளின் சமூக மற்றும் பொருளாதார மறுவாழ்விற்கான நிதியுதவியாக அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ.5.00 கோடியினை மானியமாக வழங்கி வருகிறது.

2.21 இந்தத் திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களின் பொருளாதார மறுவாழ்விற்காக மானியம் வழங்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், முதுநிலை மண்டல மேலாளர் (தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்) மற்றும் துணை ஆணையர் (கலால்) / உதவி ஆணையர் (கலால்) ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மறுவாழ்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

2.22 அடையாளம் கண்டறியப்பட்ட பயனாளிகள் ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வளர்க்கவும், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, சலவை சோப்பு, சலவைத் தூள் ஆகியவற்றைத் தயாரிக்கவும் மற்றும் சிறு வியாபாரங்களை மேற்கொண்டு நிரந்தர வருவாய் ஈட்டுவதற்காகவும் ஒவ்வொரு பயனாளிக்கும் அதிகபட்சமாக ரூ.30,000/- வரை மானியமாக வழங்கப்படுகிறது.

2.23 இத்திட்டத்தின் மூலம் 2022-2023-ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி மானியமாக வழங்க ஆணையிடப்பட்டு, முதல் தவணையாக ரூ.2.50 கோடி ஒதுக்கப்பட்டு, அதில் ரூ.1.44 கோடி, 14 மாவட்டங்களைச் சார்ந்த 483 மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக வழங்கப்பட்டுள்ளது.

**மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு**

2.24 மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் மற்றும் போதைப்

பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஆகியவற்றை மாவட்டங்களில் மேற்கொள்ளும் வகையில் ரூ.4.00 கோடி நிதியானது அரசால் ஒப்பளிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும், காவல்துறையின் அமலாக்கப் பிரிவிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

2.25 ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2. | மண்டல காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) | உறுப்பினர் |
| 3. | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் | உறுப்பினர் |
| 4. | முதன்மை கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 5. | துணைஆணையர் (கலால்) / உதவி ஆணையர் (கலால்) | உறுப்பினர்– அமைப்பாளர் |
| 6. | மக்கள் தொடர்பு அலுவலர் | உறுப்பினர் |

2.26 மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, அனைத்து மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மாதந்தோறும், விழிப்புணர்வுப் பேரணிகள், முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, பொது இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலிப் பேரணி போன்றவை மூலம் மாணவ மாணவிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் துணை கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மது அருந்துவதால் பாதிக்கப்படக்கூடிய மக்களை உள்ளடக்கிய வாழ்விடங்களை இலக்காகக் கொண்டு மாவட்ட நிர்வாகத்தால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, குழுக் கலந்துரையாடல், சுவரொட்டி தயாரித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஆகியவை பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர டி–சர்ட், பயணப் பை மற்றும் நாட்காட்டிகள் ஆகியவைகள் விழிப்புணர்வை

ஏற்படுத்த பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் தெரு நாடகங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், மாவட்ட வாரியாக பெரிய அளவிலான விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டு, பேரணியின் போது, மது அருந்துவதற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அனைத்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. போக்குவரத்துக் கழகங்களுக்கு மதுவிலக்கு விழிப்புணர்வு குறித்த ஒட்டும் வில்லைகள் அளிக்கப்பட்டு, பேருந்துகளில் ஒட்டப்படுகின்றன. மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் மாநிலம் தழுவிய போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

2.27 மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தவும் மற்றும் மாநிலம் முழுவதும்

மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மேற்காணும் ரூ.4.00 கோடியில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.8.94 இலட்சமும், காவல்துறை கூடுதல் இயக்குநர், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, சென்னை அவர்களுக்கு ரூ.15.00 இலட்சமும், காவல் கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, சென்னை மற்றும் மதுரை மண்டலங்களுக்கு தலா ரூ.10.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போதை மீட்பு மையங்கள்**

2.28 மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் போதை மீட்பு மையங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 20 போதை மீட்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

3.1 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழிப்பதற்காகவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு

அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதைத் தடுப்பதற்காகவும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

3.2 காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) அவர்கள் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக சென்னையில் ஒரு காவல் துறைத் தலைவர் மற்றும் ஒரு காவல் கண்காணிப்பாளர் ஆகியோரின் கீழ் ஒரு மத்திய நுண்ணறிவுப் பிரிவு செயல்படுகிறது. மேலும், சென்னை மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரின் (அமலாக்கம்) கீழ் இப்பிரிவு இயங்கி வருகின்றது. சென்னையில் உள்ள மத்திய நுண்ணறிவுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும், ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

3.3 மாநிலத்தில் 101 அமலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள்

அனைத்தும் 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டம் / நகரங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப் படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணியாற்றுகின்றனர்.

### 3.4 அண்டை மாநிலங்களிருந்து போலி மதுபானம் மற்றும் எரிசாராயம் கடத்துவதைத் தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:–

(i) பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்கள் மற்றும் அலைபேசி அழைப்புத் தகவல்கள் (CDR Analysis) ஆகியவற்றின் மூலம் எரிசாராயக் கடத்தல், போலி

மதுபானக் கடத்தல் மற்றும் அண்டை மாநிலங்களிருந்து மதுபானக் கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபடும் கொடுங்குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்க சிறப்புக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

(ii) திருவிழாக்கள் மற்றும் மது விற்பனை இல்லாத தினங்கள் ஆகியவற்றைப் பொறுத்து தேவைப்படும் காலங்களில் தற்காலிக சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு அண்டை மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத / போலி இந்தியத் தயாரிப்பு அயல் நாட்டு மதுபானம், எரிசாராயம் மற்றும் சாராய உறைகள் ஆகியவை தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாகக் கடத்தப் படுவதை கண்காணித்துத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் நாகப்பட்டினம் (5), கன்னியாகுமரி (1), தேனி (1), திருவள்ளூர் (5), வேலூர் (5), கடலூர் (4), விழுப்புரம் (9), கிருஷ்ணகிரி (7), ஈரோடு (1), சேலம் (2), நீலகிரி (1), திருவாரூர் (1), திருப்பூர் (1) மற்றும் கோயம்புத்தூர் (1) ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சென்னை மாநகரில் (1) ஆக மொத்தம் 45 நிரந்தர மதுவிலக்குச் சோதனைச் சாவடிகள் தமிழ்நாட்டில் உள்ளன. இதைத் தவிர

நாகப்பட்டினம் (2), கடலூர் (1), விழுப்புரம் (1), கிருஷ்ணகிரி (1), திருவள்ளூர் (1) மற்றும் திருவாரூர் (1) ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன.

(iii) கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்கவும், அண்டை மாநிலங்களிலிருந்து மதுபானம் தமிழ்நாட்டிற்குள் கடத்தி வரப்படுவதைக் கண்காணித்து தடுக்கவும் பாதிக்கப்பட்ட இடங்களில் அடிக்கடி சிறப்புச் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

(iv) தெளிந்த சாராவி என்பது செறிவு மிகுந்த ஆல்கஹால் ஆகும். இது போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மலிவு விலை மதுபானமாக விற்பதற்காகக் கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில் இத்தகைய சாராய விற்பனையால் சோக நிகழ்வுகளும் (இறப்புகள்) நிகழ்கின்றன. இந்நிகழ்வுகளைத் தடுப்பதற்கு மாநிலம் முழுவதும் மத்திய நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளில் ஆளிநர்களால் சேகரிக்கப்படும் நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகனத்

தணிக்கைகள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன.

**இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்**

3.5 ஒவ்வொரு ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம், பிற மாநிலங்களில் இருந்து மதுபானம் கடத்துதல் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறித்து தகவல்கள் தரும் உளவாளிகளுக்கு பண வெகுமதி வழங்க தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ. 15 இலட்சம் தொகையினை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

**வெகுமதி**

3.6 ஒவ்வொரு ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து கடத்தப்படும் மதுபான பாட்டில்கள் ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு பெரும் பங்கு வகிக்கும் மதுவிலக்குப் பிரிவு மற்றும் மாவட்ட, நகர சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத் தொகையாக ரூ. 15 இலட்சம் வழங்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

## 3.7 2022–ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

1. மாநிலத்தில் மதுவிலக்கு தொடர்பான குற்றங்களை முழுமையாக தடுக்க அனைத்து விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய நுண்ணறிவுப் பிரிவு மற்றும் அமலாக்கப் பிரிவு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பது தொடர்பான குற்றங்கள் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளன.
2. மொத்தம் 1,40,649 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11,828 பெண் குற்றவாளிகள் உட்பட 1,39,697 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
3. ரூ.1,77,99,900 மதிப்புள்ள 8,89,995 லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
4. ரூ.2,07,20,760 மதிப்புடைய 5,18,019 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
5. ரூ.37,21,700 மதிப்புடைய 37,217 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டது.
6. ரூ.6,05,260 மதிப்புடைய 30,263 லிட்டர் கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

7. ரூ.20,13,52,560 மதிப்பிலான 16,77,938 இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானப் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டன.
8. வாகனத் தணிக்கையின் மூலம் மதுவிலக்குக் குற்றங்களில் தொடர்புடைய 8 லாரிகள், 7 வேன்கள், 231 கார்கள், 65 ஆட்டோக்கள் மற்றும் 2,646 இரு சக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 2,957 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
9. மதுவிலக்குக் குற்றங்களில் தொடர்புடைய 162 கொடுங்குற்றவாளிகள் தமிழ்நாடு சட்டம் 14/1982–இன் (B.L. Act) கீழ் கைது செய்யப்பட்டனர்.
10. மாநிலத்தில் கள்ளச் சாராய மரணங்கள் எதுவும் இக்காலத்தில் நடைபெறவில்லை.

**எல்லையோர சோதனைச் சாவடிகளில் மின்கலத்துடன் கூடிய சூரியசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகளைப் பொருத்துதல்**

3.8 மாநிலம் முழுவதும் இயங்கி வரும் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளில், 20 சோதனைச் சாவடிகள் அண்டை மாநிலங்களின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள

மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. 2022–2023–ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டவாறு, மேற்கண்ட 20 சோதனைச் சாவடிகளில், மதுவிலக்குக் குற்றவாளிகளின் இரவு நேர சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு மின்கலத்துடன் கூடிய சூரியசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகளைப் பொருத்த ரூ.0.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

## கள்ளச்சாராய இறப்புச் சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

3.9 கடந்த 14 வருடங்களாக மதுவிலக்கு அமலாக்கத் துறையின் சிறப்பான நடவடிக்கையின் காரணமாக மாநிலத்தில் கள்ளச்சாராய இறப்பு ஏதும் நிகழவில்லை. கள்ளச்சாராயத்தில் முக்கியமாக 'மெத்தனால்' என்ற இரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. ஆதலால் 'மெத்தனால்' எளிதாக கிடைப்பதைத் தடுக்கும் பொருட்டு அதனை 2002–ஆம் ஆண்டு முதல் 1937–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்

வரம்புக்குள் அரசு கொண்டு வந்தது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், வெளியிடங்களில் இருந்து கொண்டு வருதல், விற்பனை செய்தல் போன்றவற்றை கவனமாக கட்டுப்படுத்தும் பொருட்டு, 2002–ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள், 1959–இல் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

3.10 மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அப்பொருளை பயன்படுத்த மற்றும் வைத்திருக்க உரிமம் பெற்ற பிரிவுகள் முதலியவற்றை சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கையானது அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

## மதுவிலக்கு உதவி மையம் – 10581

3.11 கட்டணமில்லா மதுவிலக்கு உதவி எண். 10581 ஒன்று ஏற்படுத்த அரசால் அனுமதிக்கப்பட்டு, அது மதுவிலக்கு தலைமையக மத்திய விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு

அறையில் நிறுவப்பட்டுள்ளது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராயம் விற்பனை ஆகிய மதுவிலக்குக் குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக இருப்பது இச்சேவை மையத்தின் நோக்கமாகும். இந்த உதவி எண் 24 மணி நேரமும் காவல்துறை கூடுதல் இயக்குநர் அமலாக்கம், அலுவலகக் கட்டுப்பாட்டு அறையில் இயங்கி வருகிறது. 01.01.2022 முதல் 31.12.2022 வரை 3,275 தகவல்கள் பெறப்பட்டு அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

3.12 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் கள்ளச்சாராய ஒழிப்பு பணியில் சிறப்பாக பணிபுரிந்த 2 ஆய்வாளர்கள், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1 தலைமைக் காவலர் ஆகியோர்களுக்கு 2022–ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

# 4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை)

## 2022-ஆம் ஆண்டின் சாதனைகள்

### 4.1 சட்ட அமலாக்க நடவடிக்கைகள்

1) தமிழ்நாடு காவல்துறை எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தில் கஞ்சா பயிரிடுவது, "பூஜ்ய சாகுபடி" நிலையில் உள்ளது.

2) 2022-ஆம் ஆண்டு 10,665 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 19 வெளிநாட்டினர் உட்பட 14,934 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 28,383 கிலோ கஞ்சா, 63,848 மாத்திரைகள் மற்றும் 98 கிலோ இதர போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

3) மாநிலங்களுக்கிடையே போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபடும் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, ஒடிசா மற்றும் தெலுங்கானா மாநிலங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4) மாநிலம் முழுவதும் பரிந்துரையின் பேரில் விற்பனை செய்யப்பட வேண்டிய மருந்துகளை, உரிய ஆவணங்கள் இல்லாமல் சிறார்களுக்கு விற்பனை செய்யும் மருந்தகங்களுக்கு எதிராக மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து கூட்டுச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

5) 06.12.2021 முதல் 05.01.2022 வரை நடத்தப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா தடுப்பு நடவடிக்கை–1.0–இன் போது போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் மொத்தம் 1,272 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 1,221 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 2,299 கிலோ கஞ்சா மற்றும் 23 கிலோ ஹெராயின் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

6) 28.03.2022 முதல் 27.04.2022 வரை நடத்தப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா தடுப்பு நடவடிக்கை 2.0–இன் போது போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் மொத்தம் 2,023 வழக்குகள்

பதிவு செய்யப்பட்டு 2,423 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 3,562.5 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

7) பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் கஞ்சா விற்பனை செய்வதை நிறுத்தும் பொருட்டு, கல்வி நிறுவனங்களின் அருகில் உள்ள கடைகளில் சிறப்புச் சோதனைகள் நடத்தப்பட்டன. அவற்றுடன் கஞ்சா மற்றும் இதர போதைப் மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் தீமைகள் குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

8) விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், தமிழ்நாடு காவல் துறையினரால் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் 2022–ஆம் ஆண்டு அதிக அளவிலான போதை

மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

9) போதைப் பொருள் குற்றவாளிகள் மீது பதிவு செய்யப்பட்ட 72 வழக்குகளில் குற்றவாளிகளின் சொத்துக்கள் தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு, ரூ.17.87 கோடி மதிப்புள்ள 151 அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

10) போதைப் பொருள் வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் / நண்பர்களுக்குச் சொந்தமான 4,994 வங்கிக் கணக்குகளில் இருந்த ரூ.2.00 கோடி தொகை குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 102–இன் கீழ் முடக்கப்பட்டது.

11) போதைப் பொருள் வழக்குகளில் ஈடுபட்ட முன்னாள் குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, 2019–ஆம் ஆண்டு முதல் வழக்குகளில் தொடர்புடைய 24,880 குற்றவாளிகள் பட்டியலிடப்பட்டு அவர்களுள்

12,000 குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 5,495 குற்றவாளிகளிடம் பிணைமுறைகள் பெறப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு அவர்களுள், பிணை நிபந்தனைகளை மீறிய 195 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12) போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவில், காவல்துறைத் தலைவரின் விருப்புரிமை நிதியின் கீழ் வழங்கப்பட்ட 3 கணினிகள் மற்றும் மென்பொருளுடன் கூடிய சைபர் செல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## 4.2 விழிப்புணர்வு நடவடிக்கைகள்

1) இளைஞர்களிடையே குறிப்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமலாக்கப் பணியகமானது 11.08.2022 அன்று மாநிலம் முழுவதும் மிகப்பெரும் அளவில் போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழியினை ஏற்பாடு செய்திருந்தது. மாநில அளவிலான இவ்விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் நடத்தப்பட்டது.

இவ்விழாவில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த 74 இலட்சம் மாணவர்கள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் உறுதிமொழி ஏற்றனர். இம்முயற்சியானது உலக சாதனையாக, உலக சாதனை ஒன்றியத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2) மாண்மிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி மற்றும் போதைப் பொருட்களின் தீய விளைவுகள் குறித்த 20 நிமிட விழிப்புணர்வு காணொளி ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை மாணவர்களுக்கு காண்பிக்கும் பொருட்டு அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லுரிகளுக்குப் பகிரப்பட்டுள்ளது.

3) மாணவர்கள் போதைக்கு அடிமையாவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 14,000 கல்வி நிறுவனங்களில் மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட போதை எதிர்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4) போதைப் பொருட்களுக்கு எதிரான இயக்கத்தில் தன்னார்வத் தொண்டு புரிவதற்கு நாட்டு நலப் பணித் திட்ட (NSS) தன்னார்வத் தொண்டு திட்டத்தின் மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

5) விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு சமூக ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரம் தொடங்கப் பட்டுள்ளது.

6) போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கான ஒரு வலைதளம் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிரான ஒரு விழிப்புணர்வு திரைப்படம் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

7) 3 மோப்ப நாய்கள் வாங்கப்பட்டு, அவற்றிற்கு போதைப் பொருட்களைக் கண்டறியும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில், போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கையில் 10 மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**அமலாக்கப் பணியக குற்றப் புலனாய்வு பிரிவு உருவாக்கப்படுதல்**

4.3 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களுக்கு எதிராக பயனுள்ள நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவானது போதைப் பொருள் தடுப்புப் பிரிவோடு இணைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

வெளியிட்டுள்ளார். அவ்வறிவிப்பின்படி தமிழ்நாடு அமலாக்கப் பணியகக் குற்றப் புலனாய்வுத் துறை உருவாக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

4.4 புதிதாக உருவாக்கப்பட்ட அமலாக்கப் பணியகக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், சட்ட விரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைச் சட்டம் ஆகியவற்றை அமல்படுத்தும் பொறுப்பு உள்ளது.

4.5 ஒவ்வொரு மாவட்டத்திலும், அமலாக்கப் பணியகப் பிரிவு அமைக்கப்படும். மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தற்போதுள்ள அலகுகள் முறைப்படுத்தப்பட்டு, கூடுதல் பொறுப்பாக போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பணி மாவட்டங்களில் உள்ள அமலாக்கப் பணியக அலகுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

5.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்), 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act, 1956) கீழ் மாநில பொதுத்துறை நிறுவனமாக 23.05.1983 அன்று நிறுவப்பட்டது.

**தனிச் சிறப்புரிமை**

5.2 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17–C (1–A) (a)–இன் படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் மற்றும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு முழுவதும் மொத்த விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 23.05.1983 முதல் மதுபான மொத்த விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. மேலும், 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17–C (1–B) (a)–இன்படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த

சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 29.11.2003 முதல் மதுபான சில்லறை விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. இவை மட்டும் இல்லாமல், இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளையும் இந்நிறுவனம் சந்தைப்படுத்தி வருகிறது.

**இயக்குநர் குழுமம்**

5.3 இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்குநர் குழுமம் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, அரசுச் செயலாளர், வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

**பங்கு மூலதனம்**

5.4 இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூ.15.00 கோடி முழுவதும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**நிறுவனத்தின் அமைப்பு**

5.5 மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, பொது மேலாளர் (நிதி), மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை), தொழிலாளர் இணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்), துணைப் பொது மேலாளர் (கொள்முதல் மற்றும் விற்பனை), நிறுவனச் செயலர், முதன்மைக் கணக்கு அலுவலர், சட்ட அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

**பதிவு அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கள்**

5.6 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு சென்னை,

கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவலகங்களை மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் நிர்வகிக்கின்றனர்.

**சிறப்பு பறக்கும் படைகள்**

5.7 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் முறையாக செயல்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யும் பொருட்டு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மண்டல அலுவலகங்களில் சிறப்பு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பறக்கும் படைகளுக்கு துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் தலைமை வகிக்கின்றனர்.

**மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், மதுபான சில்லறை விற்பனைக் கடைகள்**

5.8 இந்நிறுவனத்திற்கு 31.03.2023 அன்றுள்ளவாறு, 38 மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், 43 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகள், 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன.

5.9 இந்நிறுவனம் 43 மதுபானக் கிடங்குகளில் மதுபானங்களை இருப்பு வைக்கிறது. இந்த 43 மதுபானக் கிடங்குகளில் 31 மதுபானக் கிடங்குகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

**மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்கள்**

5.10 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் 31.03.2023 அன்றுள்ளவாறு, 6,648 கடை மேற்பார்வையாளர்களும், 14,794 விற்பனையாளர்களும் மற்றும் 2,876 உதவி

விற்பனையாளர்களும் ஒப்பந்த/தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

## மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர் நலத் திட்டங்கள்

5.11 மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியம் மட்டுமில்லாமல் ஒவ்வொரு ஆண்டும் ஊக்கத்தொகை (போனஸ்) மற்றும் கருணைத் தொகையானது அரசின் உத்தரவிற்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், பணிக்கொடை, குடும்ப சேமநல நிதித் திட்டம், ஆண்டு கூடுதல் ஊக்கத் தொகை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## மதுபான வகைகள் கொள்முதல்

5.12 இந்நிறுவனம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு

மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளைக் கொள்முதல் செய்கிறது.

## இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கடைகள் மூலம் விற்பனை செய்தல்

5.13 இந்நிறுவனம் 553 வகையான வெளிநாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளை எப்.எல்.11 உரிமம் பெற்ற 238 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்கிறது.

## கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல்

5.14 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் திருட்டு நடப்பதைத் தடுப்பதற்காகவும் அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தவும் அதிகம் பாதிக்கப்படக்கூடிய 3,000 கடைகளில் இரவுப் பார்வை கொண்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன

இந்த கண்காணிப்பு கேமராக்கள் திருட்டுக்களைக் குறைப்பதற்கு மட்டுமல்லாமல் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபடக்கூடிய தனிநபர்களைக் கண்டுபிடிக்கவும், மதுபானக் கடைகளின் அருகில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் ஏதேனும் நடந்தால் அவற்றை அடையாளம் காணவும் வழிவகை செய்கிறது. இந்த கண்காணிப்புக் கேமராக்களில் பதிவாகும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளன.

**இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணைய உரிமம்**

5.15 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து மதுபானக் கிடங்குகளும் மற்றும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் 2006–ஆம் ஆண்டின் இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் வழங்கியுள்ள உரிமம் உரிய காலத்திற்குள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**பணப் பாதுகாப்பு பெட்டகம் நிறுவுதல்**

5.16 திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள நகர மற்றும் கிராம பஞ்சாயத்துப் பகுதிகளில் செயல்படும் 2,825 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில், பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் ஒவ்வொன்றும் 300 கிலோவிற்கு மேல் எடை கொண்டவை மற்றும் பிற கருவிகளால் பழுது ஏற்படுத்த இயலாதவை ஆகும். பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் மதுபானக் கடைகளின் தரையில் பதிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பின்புறமும், மேல் பகுதியிலும், வலது மற்றும் இடது என இரண்டு பக்கங்களிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. கடை பணியாளர்கள் விற்பனை செய்த தொகையினை விற்பனை நேரம் முடிந்த பிறகு பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இந்த பணப் பாதுகாப்பு பெட்டகம் உதவுகிறது.

## மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவுதல்

5.17 நுகர்வோர்கள் மின்னணு தொழில்நுட்பம் வாயிலாக விற்பனைத் தொகையைச் செலுத்துவதற்கு ஏதுவாக, அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலும் மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

## மதுவிற்பனை இல்லாத நாட்கள்

5.18 தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகிய எட்டு நாட்கள் மது விற்பனை இல்லாத நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவைத் தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

## அரசு வருவாய்

5.19 அரசின் வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:–

| வரிசை எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1 | 2003–04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2 | 2004–05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3 | 2005–06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4 | 2006–07 | 3986.41 | 3487.20 | 7473.61 |
| 5 | 2007–08 | 4764.05 | 4057.11 | 8821.16 |
| 6 | 2008–09 | 5755.42 | 4846.08 | 10601.50 |
| 7 | 2009–10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8 | 2010–11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9 | 2011–12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10 | 2012–13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11 | 2013–14 | 5034.82 | 16640.07 | 21674.89 |
| 12 | 2014–15 | 5731.18 | 18433.77 | 24164.95 |
| 13 | 2015–16 | 5836.01 | 20009.57 | 25845.58 |
| 14 | 2016–17 | 6248.17 | 20747.08 | 26995.25 |
| 15 | 2017–18 | 6009.25 | 20788.71 | 26797.96 |
| 16 | 2018–19 | 6863.11 | 24294.72 | 31157.83 |
| 17 | 2019–20 | 7205.97 | 25927.27 | 33133.24 |
| 18 | 2020–21 | 7821.69 | 25989.46 | 33811.15 |
| 19 | 2021–22 | 8236.60 | 27814.05 | 36050.65 |
| 20 | 2022–23 | 10401.56 | 33697.00 | 44098.56 |

## முடிவுரை

கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கள்ள மற்றும் போலி மதுவகைகளின் விற்பனை மற்றும் கடத்தல், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் விற்பனை ஆகியவற்றைத் தடுப்பதற்கு அரசு உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும். மாநிலத்தின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கையை திறம்பட செயல்படுத்துவதில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் போலி மதுபான விற்பனையில் முன்னர் ஈடுபட்டிருந்த நபர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான ஒருமுகப்பட்ட முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையான நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு அரசு மருத்துவமனைகளில் போதை மீட்பு மையங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம்களை அரசு நடத்தி வருகிறது. மதுபானம் மற்றும் போதைப்

பொருட்களின் தீமைகளுக்கு எதிரான தீவிர விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் மதுவிலக்குக் குற்றவாளிகள் மற்றும் மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

**V செந்தில்பாலாஜி**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.